Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

தனிப்பிரதி ரூ.10/-

மலர் - 28 இதழ் - 10 அக்டோபர் 2015

## ஊழியர் கருத்தரங்கம்

செப்டம்பர் 22 - 24, 2015 - ஏற்காடு



ஏற்காடு மலையில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்ட ஊழியர்கள்



# பதினெட்டாம் வேதாகம கருத்தரங்கம்

அக்டோபர் 21, 22 – 2015 ( புதன், வியாழன் )

## கருத்தாளர்களும் கருத்துக்களும்

சகோ. P. சுதாகர் (சென்னை)

நானே திராட்சைச் செடி ( யோவான். 15 : 5 )

" I am the vine " (John 15 : 5)

சகோ. G. தானியேல் (சென்னை)

நானே உலகத்துக்கு ஒளியாயிருக்கிறேன் ( யோவான். 8 : 12 )

" I am the light of the world " (John 11 : 25)

சகோ. ஆனந்தராஜ் (பாண்டி)

நானே நல்ல மேய்ப்பன் ( யோவான். 10 : 14 )

" I am the good shepherd " (John 10 : 14)

சகோ. பாண்டியன் (பாண்டி)

நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் ( யோவான். 14 : 6 )

" I am the way, the Truth and the Life " (John 14 : 6)

சகோ. பிரபுதாஸ் (சென்னை)

நானே அவர்கள் சுதந்திரம் ... காணியாட்சி ( எசே. 44 : 28 )

" I am their inheritance ... possession " (Eze. 44 : 28)

சகோ. ஜேம்ஸ் ராஜ்குமார் (சென்னை)

நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன் ( யோவான். 11 : 25 )

" I am the resurrection and the life " (John 11 : 25)

சகோ. ஹென்றி மோகன் (ஊட்டி)

... உங்கள் தேவனாகிய கர்த்தர் நானே ( லேவி. 20 : 24 )

" I am the Lord your God who has ... from the people " (Lev. 20 : 24)

சகோ. ராஜு (சென்னை)

நான் நானே கர்த்தர், ... இரட்சகர் இல்லை ( ஏசாயா 43 : 11 )

" I even I am the Lord and besides me there is no saviour " (Isa. 43 : 11)

சகோ. தேவப்பிரியம் (சென்னை)

ஜீவ அப்பம் நானே ( யோவான். 6 : 48 )

" I am the bread of life " (John 6 : 48)

சகோ. E.Z.S. ராஜநாயகம் (காங்கேயம்)

நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே ( அப். 9 : 5 )

" I am Jesus whom thou persecutest " (Acts 9 : 5)

## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 3 |
| 2. ஏன் இன்று ஒரே ஞானஸ்நானம் ... | 11 |
| 3. பெண்கள் பகுதி | 15 |
| 4. வாலிபர் பகுதி | 19 |
| 5. சிறுவர் பகுதி | 22 |
| 6. சபை | 25 |
| 7. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை | 30 |
| 8. கோபம் என்கிற அமிலம் | 33 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 28 October - 2015 Issue - 10

ஆசிரியர் உரை

## என்ன செய்வதென்று தெரியாத போது...

ஆஹா! இப்படி ஒரு தலைப்பைத் தான் வெகு நாட்களாகத் தேடிக் கொண்டிருந்தோம் என்று நீங்கள் நினைப்பது புரிகிறது. எப்படியெனில், ஏராளமான மேடுகளையும், பள்ளங்களையும் உள்ளடக்கிய இப்பூலோக வாழ்க்கைப் பாதையில் எதிர்பாராமல் எதிர்கொள்ள நேரும் பிரச்சனை களைச் சமாளிக்க வழி தெரியாமல் கையைப் பிசைந்து, விழி பிதுங்கி நிற்பது மானிடப் பிறவிகளாகிய நம் எல்லோருக்கும் வாடிக்கையான ஒன்றா கவே உள்ளது. இல்லையில்லை இவர்கள் இதற்கு விதிவிலக்கு என்று நாம் யாரையும் தள்ளிவிட முடியாது. ஏழை, பணக் காரன்; கோழை, வீரன்; பாமரன், படித்தவன்; அறிவிலி,அறிவாளி; வெட்டிக்காரன், கெட்டிக்காரன்; அற்பன், அதிகாரமிக்கவன்; செல்லாக்காசு, செல் வாக்குள்ளவன் என்று எவ்வித பேதமுமின்றி எல்லோரும் இதில் அடக்கமே. ஆம், எல்லோருமே தங்கள் வாழ்வின் ஏதாவதொரு கட்டத்தில், எக்கச்சக்க மான சூழ்நிலையில் இதற்கு என்ன செய்வது, அதை எப்படிச் சமாளிப்பது, அடுத்து இதற்கு என்ன வழி என்ற கேள்விகளோடு நேரங்களையும், நாட்களையும் எதிர்கொள்ளுகிறவர்களாகவே இருக்கிறோம்.

சரி, இப்படி என்ன செய்வதென்று தெரியாதபோது என்ன செய்ய வேண்டுமென்று கற்றுக்கொடுப்பதில் நான் கைதேர்ந்தவன் என்பதால் இத் தலைப்பை நான் தெரிந்துகொள்ளவில்லை. தடுமாறும் சூழ்நிலைகளைக் கையாளத் தெரியாத கையாலாகாதவர்களில் நானும் ஒருவன் என்று

ஒத்துக்கொள்வதில் எனக்கு எவ்விதத் தயக்கமும் இல்லை. ஆயினும், என் தேவனால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் பரிசுத்த எழுத்துக்களில் **என்ன செய்யவேண்டுமென்று தெரியாதபோது என்ன செய்ய வேண்டும் என்பதற்கான விடை இருக்கிறபடியால்** நம் எல்லோருக்கும் பயன்படும்படியாய் இத்தலைப்பைத் தெரிந்திருக்கிறேன். அவ்வளவே!

இத்தலைப்புக்கான ஆதார வசனம் 2 நாளாகமம் 20 : 12 ல் உள்ளது. " எங்கள் தேவனே அவர்களை நீர் நியாயந்தீர்க்கமாட்டீரோ? எங்களுக்கு விரோதமாக வந்த இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக் குப் பெலனில்லை: **நாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை.** ஆகையால், எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண் டிருக்கிறது என்றான் ". இந்த வார்த்தைகளைப் பேசினவர் தெற்குப் பகுதி யாகிய யூதாவை ஆண்ட யோசபாத் ராஜா. பக்தியாய் வாழ்ந்த ராஜாக்களில் இவனுக்குச் சிறப்பிடம் உண்டு. இப்படி பக்தியாய் வாழ்ந்த யோசபாத் ராஜா போன்றவர்களே தன் வாழ்க்கைப் பாதையின் ஒரு கட்டத்தில் என்ன செய்வ தென்று தெரியாமல் திகைத்து நின்றிருக்கிருக்கும்போது, நானும் நீங்களும் இச்சூழ் நிலைக்கு விதிவிலக்காக எப்படி இருக்க முடியும்?

பக்தியாகவும், சிறப்பாகவும் வாழ்ந்த இந்த யோசபாத் ராஜா எப்பொழுது இப்படியொரு பலவீனப்பட்ட சூழலை எதிர்கொண்டான் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு நமது வழக்கத்தின்படி இதற்கான பின்னணி குறித்துக் கொஞ்சம் பார்த்து விடுவோமா?

தன் அந்திய காலத்தில் பக்தியிலும், புத்தியிலும் சீரழிந்து போன ஞானி சாலமோன் ராஜாவுக்குப் பின் ஒன்றுபட்டிருந்த இஸ்ரவேல் தேசம் வடக்கு, தெற்கு என்று பிரிந்து போனது. ரெகொபெயாம் தொடங்கி சிதேக்கியா வரை ஒரு 20 ராஜாக்கள் யூதாவை ஆண்டார்கள். இவர்களில் நான்காவது ராஜாதான் நம்ம யோசபாத். தன் தகப்பனாகிய ஆசாவுக்கு அடுத்து ராஜாவாகி அரசாட்சியோடு அருளாட்சியையும் இணைத்து நடத்தி தேவதய வினால் தேசத்தை உச்சத்திற்குக் கொண்டு சென்றான்( II நாளா 18:1). யோசபாத் கர்த்தருடைய கற்பனைகளின்படி நடந்து கர்த்தருடைய வழி களில் தன் மனதை உற்சாகமடையச் செய்ததோடு நிற்காமல் தேசத்தி லுள்ள பட்டணங்கள்தோறும் கர்த்தருடைய புத்தகம் பிரசங் கிக்கப்பட வேண்டுமென்று கட்டளையுமிட்டான் (II நாளா 17:4-9).

யானைக்கும் அடி சறுக்கும் என்பது போல இஸ்ரவேலின் துன்மார்க்க ராஜாவாகிய ஆகாபோடே சம்பந்தங்கலந்து அதற்கான கடும் விலையைக்

கொடுக்க வேண்டியதாயிருந்தாலும் கூட, **அவன் தேவனுக்காகச் செய்த நன்மையான காரியங்களினிமித்தம்** ( II நாளா 19:2-3 ) **கர்த்தர் இவனுக்கு அநுசாரியாயிருந்து காப்பாற்றி** (18:31) எருசலேமிலுள்ள தன் வீட்டிற்குச் சமாதானத்தோடே வரும்படி செய்தார் (19:1). தன்னுடைய ராஜ்யபாரத்தின் ஆரம்பத்தில் தேசத்தைத் தேவனுடைய வார்த்தைகளால் நிரப்ப பிரபுக்களையும், லேவியரையும் ஆசாரியரையும் ( II நாளா 17:7-9 ) பயன்படுத்தின யோசபாத் ராஜா, கர்த்தர் தனக்கு அளித்த உயிர் பிச்சைக்கு நன்றியாக சிம்மாசனத்தை விட்டிறங்கி தானே தேசமெங்கும் பிரயாணம் போய், அருளுரையாற்றி அவர்களைத் தங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திரும்பப் பண்ணினான் (II நாளா 19:4 ) போதுமா இவன் எப்படிப் பட்ட ராஜா என்பதற்கு! இப்படியொரு ராஜாவை சீண்டிப் பார்க்காமல் தொடர்ந்து மவுனம் காக்க சாத்தனாலும், அவன் கூட்டத்தாலும் முடியுமா? மோதி வீழ்த்த முடியாது என்று திட்டமாகத் தெரிந்தாலும் கூட, வீண் முயற்சியில் இறங்காமல் பிசாசு இருப்பதில்லை, ஆதி முதல் அப்படி இருந்ததுமில்லை.

ஆம், ஒரு சமயம் " மோவாப் புத்திரரும், அம்மோன் புத்திரரும் அவர்களோட அம் மோனியருக்கு அப்புறத்திலுள்ள மனுஷருங்கூட யோசபாத்திற்கு விரோதமாய் ஏராளமான ஜனங்கள் கடலுக்கு அக்கரையிலிருந்து வருகிறார்கள்; இதோ, அவர்கள் எங்கேதியாகிய ஆசாசோன் தாமாரில் இருக்கிறார்கள் என்று அறிவித்தார்கள் " (20 : 1 - 2). இங்கே, பயந்து போன யோசபாத் யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறினபடியால், கர்த்தரிடத்தில் சகாயந் தேடும்படி ஜனங்கள் தேசத்தின் சகல பட்டணங்களிலிருந்த ஒட்டுமொத்த யூதா கோத்திரமும் திரண்டு வந்து ( வ.13 ) ஆலயத்தில் கூடினார்கள். அங்கே சபையிலே நின்று பரலோகத்தின் தேவனை நோக்கி, அர்த்தமுள்ள ஒரு மன்றாட்டை யோசபாத் ஏறெடுத்தான் ( 20:6-12). இந்த மன்றாட்டின் ஊடேதான் " **நாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை** " என்று கூறினான். அப்பொழுது கர்த்தருடைய ஆவி சகரி யாவின் புத்திரன் யகாசியேல் மேல் வந்தபடியால் அவன் " **சகல யூதா கோத் திரத்தாரே, எருசலேமின் குடிகளே, ராஜாவாகிய யோசபாத்தே கேளுங்கள்; நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்; இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது " என்றான்** (II நாளா 20:15).

பிறகு அவர்கள் கர்த்தருடைய வழிகாட்டுதலின்படியாக நடந்து, தங்கள் பயத்திற்குப் பாடை கட்டி, யுத்தத்திற்குத் துணிந்து சென்றார்கள் (20:17-21). அங்கே போர்க்கள தர்மத்திற்குச் சற்றும் சம்பந்தமில்லாத

ஒன்று நடந்துள்ளதை நாம் கவனிக்க வேண்டும். ஆம், ஆயுதமணிந்தவர்களுக்கு முன்பாகப் **பாடகர்கள் நிறுத்தப்பட்டார்கள்.** அவர்கள் **பாடித் துதி செய்யத் துவங்கின போது எதிரிகள் தங்களுக்குள்ளாக அடித்து, வெட்டுண்டு விழுந்தார்கள்**( வ.22-24). யோசபாத்திற்கும், யூதாவுக்கும் எதிராகக் கூட்டுச் சேர்ந்து ஏராளமாய் வந்தவர்களில் ஒருவர் கூடத் தப்பவில்லை. இத்தனைக்கும் **யூதாவின் மனிதர் போரிடத் தங்கள் ஆயுதத்தைத் தொடக்கூட இல்லை.** கர்த்தர் யாரைக் கொண்டு எப்படி வெற்றி கொடுக்கிறார் என்று பாருங்கள்! **நம்முடைய பிரச்சனை கர்த்தருடைய பிரச்சனையாக மாறும் பொது அது எப்படிப் பட்டதாக இருந்தாலும் பஞ்சாய்ப் பறந்து போய்விடும்** என்பதற்கு இதைவிடச் சான்று வேறென்ன வேண்டும்? யோசபாத்தும் அவனுடைய ஜனங்களும் எதிரிகளின் ஏராளமான ஆடை, ஆபரணங்களைக் கொள்ளையிடு மளவுக்கு அவைகள் அவ்வளவு அதிகமாய் இருந்தது. கலக்கத்தோடு சென்ற யோசபாத்தும், யூதாவின் மனுஷரும் மகிழ்ச்சியோடே எருசலேமுக்குத் திரும்பினார்கள்.

இப்பொழுது, யோசபாத் ராஜாவோடு சம்பந்தப்பட்ட இச்சம்பவம் நமக்குக் கற்றுக்கொடுக்கும் பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

## I யோசபாத் தேவ ஒத்தாசைக்காக ஜெபித்தார் ( 5 - 12 )

என்ன செய்வதென்று தெரியாதபோது, என்ன செய்யவேண்டுமென்று யோசபாத் ராஜா நமக்குக் கற்றுக் கொடுக்கும் முதல் பாடம், ஆபத்தான சூழ்நிலைகளில் தேவனை நோக்கி ஜெபிக்க வேண்டுமென்பது.

யோசபாத் ராஜா தேவனுக்கு நன்றியாயும் உண்மையாயும் வாழ்ந்து வந்த நாட்களில், தன்னை எதிர்த்து வந்த ஏராளமான கூட்டத்தால் தனக்கு ஆபத்து வந்த போது **தேவன் என்னைக் கைவிட்டு விட்டார், நான் அவருக்கு உண்மையாய் வாழ்ந்து என்ன பயன்** என்றெல்லாம் நம்மைப்போல் முறுமுறுத்து, கேள்வி களை தேவனுக்கு எதிராக எழுப்பாமல் யூதாவின் பெண்கள், குழந்தைகள் என்று சகல குடிகளோடும் சேர்ந்து தேவனுடைய நாமத்தை மகிமைப் படுத்தி, அவருடைய வல்லமையில் நம்பிக்கை வைத்து, அவருடைய வாக்குத்தத்தங்களை எடுத்துச் சொல்லி. **அத்தோடு எங்களால் முடியாது என்று தங்கள் இயலாமையையும் வெளிப்படுத்தி ஜெபித்தான்.**

ஆபத்தான சமயங்களில் ஒத்தாசை வேண்டி தேவனிடத்தில் மன்றாடும்பொது நம்மு டைய நீதி பற்றி அவருக்கு எடுத்துச் சொல்வது அவசியமில்லாத ஒன்று. ஏனெனில், தேவன் எல்லாம் அறிந்தவராக இருக்கிறார். நாம் ஒன்றை எடுத்துச் சொல்லி அதனடிப்படையில் அவர்

விளங்கிக் கொள்ளவேண்டிய சூழ்நிலையில் அவர் ஒருபோதும் இருப்ப தில்லை. யோசபாத் இதற்கு சிறந்த ஓர் எடுத்துக்காட்டு. உத்தமமான வாழ்வுக்குத் தன்னை ஒப்புக்கொடுத் திருந்தும்கூட ( 19.11 ) தன்னுடைய உத்தமம் மற்றும் நீதி பற்றி வாயே திறக்கவில்லை அவன். ஆனால், நாம் என்ன செய்கிறோம்? தேவநீதி மற்றும் உத்தமத்தின் வாடையே நம்மீது படாத நிலையிலும் கூட கூரை மீது ஏறி நின்று நம்முடைய நீதிபற்றி நாமே கூப்பாடு போட ஆரம்பித்து விடுகிறோம். நாம் யோசபாத்திடமிருந்து பாடம் கற்றே ஆக வேண்டும்.

இன்னும் யோசபாத் ராஜா அந்த ஜெபத்தை எப்படி முடிக்கிறார் என்பதும் கவனிக்கத்தக்க ஒன்றாகவே உள்ளது. நாங்கள் செய்ய வேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை. **ஆகையால், எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக்கொண்டிருக்கிறது** (20:12) என்றான். எங்கள் கண்கள் **உம்மையும்** என்று ஜெபிக்கவில்லை, " உம்மையே " என்றுள்ளதை நாம் குறிப்பாகக் கவனிக்கவேண்டும். நம்முடைய ஜெபங்க ளெல்லாம் இப்படியா உள்ளது? நம்மால் ஆன சகல முயற்சிகளையும் சகல இனங்களிலிருந்தும் எடுத்துவிட்டுப் பிறகு " கர்த்தரிடத்திலும் " ஜெபித்துப் பார்கலாம் என்றல்லவா பெரும்பாலும் ஜெபிக்கிறவர்களாக உள்ளோம்! தவறு, தவறு, நிச்சயமாகத் தவறு.

" ஆபத்துக் காலங்களில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய் " ( சங்50:15 ) என்னும் ஆசாவின் வார்த்தைகள் யோசபாத்துக்குத் தெரிந்திருந்தது. ஆனால் நமக்கு? அது மாத்திரமல்ல " எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன் வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும் " (சங் 121:1.2) என்னும் வசனங்களின் பொருளும் யோசபாத்துக்குத் தெரிந்திருந்தது. ஆனால் நமக்கு?

அருமையானவர்களே! என்ன செய்வதென்று தெரியாத நிலையை நம்முடைய வாழ்க்கைப் பாதையின் ஏதாவது ஒரு கட்டத்தில் எதிர்கொண்டு தான் ஆக வேண்டும். அப்பொழுதெல்லாம் நாம் செய்ய வேண்டிய முதல் காரியம், " நம் சூழ்நிலைகளை, பிரச்சினைகளை அவரிடத்தில் எடுத்துச் சென்று அவரையே நோக்கிக் கொண்டிருக்கிறதாக இருக்க வேண்டும் " (II நாளா 20:12).

**II யோசபாத் தேவ ஒத்தாசைக்காகக் காத்திருந்தான்**

என்ன செய்வதென்று தெரியாதபோது என்ன செய்யவேண்டுமென்று

யோசபாத் ராஜா நமக்குக் கற்றுக்கொடுக்கும் இரண்டாம் பாடம், தேவனை நோக்கி ஜெபித்துவிட்டு தேவ ஒத்தாசைக்காக நாம் காத்திருக்கவேண்டுமென்பது.

தேவ தயவுக்காக நாம் காத்திருக்க வேண்டுமென்பது தேவனால் எதிர்பார்க்கப்படும் ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. சர்வ ஞானமுள்ள தேவன் நம்முடைய விருப்பத்தின்படி செயல்பட வேண்டுமென்று நாம் எதிர் பார்க்கக்கூடாது. காத்திருப்பது அதுவும் ஒன்றிற்காக நெடு நாளாய்க் காத்திருப்பது இருதயத்தை இளைக்கப் பண்ணும் (நீதி 13:12) உண்மை தான்! ஆயினும், தேவனை நெருக்கவும் அவருக்கு நெருக்கடி கொடுக் கவும் நமக்கு எந்த அதிகாரமும் இல்லை தானே! அப்புறம் என்ன? நம்ம யோசபாத் ராஜா ஓர் ஏடாகூடமான சூழ்நிலையிலும் தேவனிடத்தில் காத்திருந்தான் என்பதை நாம் கவனிக்க வேண்டும். II நாளா 20:13 இவ்விதமாகக் கூறுகிறது. யூதா கோத்திரத்தார் அனைவரும் அவர்கள் குழந்தைகளும், அவர்கள் பெண் ஜாதிகளும், அவர்கள் குமாரருங்கூட கர்த்தருக்கு முன்பாக நின்றார்கள் என்று. " **நின்றார்கள்** " என்பதின் பொருள் காத்திருந்தார்கள் என்பதே. ஆம், கர்த்தருடைய சமூகத்தில் காத்தி ருந்தார்கள் - அய்யோ அய்யோ என்று அலறி கூப்பாடு போடவில்லை.

தேவனுக்குப் பயந்து வாழ்ந்தவர்கள் எப்பொழுதும் கர்த்தருக்குக் காத்திருந்திருக்கிறார்கள். மிகுந்த ஆபத்தான சூழ்நிலையில் கூட அப்படிச் செய்திருக்கிறார்கள். இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து விடுவித்து வழி நடத்தி வந்த போது, **போர்வோனின் இருதயம் கடினப்பட்டு இஸ்ரவெலைப் பின் தொடர்ந்து பிடித்துவர சகல குதிரைகளையும், இரதங்களையும், வீரர்களையும் அவர்களைப் பிடித்துவர அனுப்பினான்** (யாத் 14:8). இஸ்ரவேலர்கள் அவர்களைத் திரும்பிப்பார்த்து முறையிட்டார்கள் (யாத் 14 :10-12). " அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி பயப்படாதிருங்கள் நீங்கள் **நின்று கொண்டு** இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காண மாட்டீர்கள் " (யாத்14 :13) என்றான். இங்கே **நின்றுகொண்டு** என்பதின் பொருள் **காத்திருந்து** என்பதே. அங்கே என்ன நடந்தது என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆம், துரத்திவந்தவர்கள், செங்கடலில் அழிந்து போனார்கள்.

அப்படியானால், அருமையானவர்களே! நம்முடைய வாழ்க்கையில் நாம் தேவ வழிநடத்துதலுக்காகவும், தேவ ஒத்தாசைக்காகவும் காத்திருக் கிறவர்களாக உள்ளோமா? தாவீதைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் கூறுவதைப் பாருங்கள். " **கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை**

ஸ்திரப்படுத்தவார்; திட மனதாயிருந்து கர்த்தருக்கே காத்திரு என்று " (சங் 27:14) மேலும், " நீங்கள் அமர்ந்திருந்து, அதாவது காத்திருந்து , நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள் " (சங் 46:10) அந்தக் காத்திருக்கு தலைக் குறித்து ஏசாயா தீர்க்கனைக் கொண்டு ஆவியானவர் இன்னும் எவ் வளவு நேர்த்தியாகக் கூறுகிறார் என்று பாருங்கள். " கர்த்தருக்குக் காத்திருக் கிறவர்களோ புதுபெலன் அடைந்து கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையமாட்டார்கள். நடந்தாலும் சோர்ந்து போகார்கள் " (ஏசாயா 40:31) என்று.

ஆகவே, நாம் நம் வாழ்க்கையில் என்ன செய்யவேண்டுமென்று தெரி யாத நிலையை எதிர்கொள்ளும் போது, என்ன செய்யவேண்டுமென்ப தற்கு, யோசபாத் ராஜா போல தேவனிடத்தில் ஜெபித்து, அவருடைய வழி நடத்துதலுக்காகக் காத்திருக்கக் கற்றுக் கொள்வோம்.

## III யோசபாத் தேவனை நம்பி வெற்றி பெற்றான் (11 - 27)

என்ன செய்யவேண்டுமென்று தெரியாதபோது, என்ன செய்ய வேண்டுமென்று யோசபாத் நமக்குக் கற்றுக்கொடுக்கும் இன்னுமொரு பாடம், தேவன் மீது நம்பிக்கை வைத்து காத்திருந்து செயல்பட்டால் வெற்றி நிச்சயம் என்பது.

மிகப்பெரிய ஆபத்து தன்மீதும் தன் ஜனங்கள் மீதும் வந்திருந்த போதும், கர்த்தருடைய வழிநடத்துதலுக்காகக் காத்திருந்த யோசபாத் கர்த்தர் மீதான தன் நம்பிக்கையை எந்த ஒரு கட்டத்திலும் இழக்கவில்லை. "இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது" (வ.15) என்று கர்த்தருடைய ஆவி இறங்கின யகாசியேல் மூலமாகச் சொல்லப்பட்ட வார்த்தைகளை அப்படியே முழுமனதோடு நம்பி தேவ சமூகத்தில், " தரைமட்டும் முகங் குனிந்து " (வ.18) தன் ஜனங்களிடத்தில் எவ்வளவு நம்பிக்கை யோடு பேசியிருக்கிறான் பாருங்கள்! அவர்கள் அதிகாலமே எழுந்திருந்து, தெக்கோவாவின் வனாந்திரத்திற்குப் போகப் புறப்பட்டார்கள். புறப்படு கையில் யோசபாத் நின்று: யூதாவே எருசலேமின் குடிகளே, கேளுங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள். அப்பொழுது நிலைப்படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள். அப்பொழுது சித்தி பெறுவீர்கள் (20:20), அதாவது, வெற்றி பெறுவீர்கள் என்றான்.

அங்கே கர்த்தரும், கர்த்தருடைய தீர்க்கதரிசியும் சொன்ன வார்த்தைகளைத் தான் நம்பினதோடு, ஒட்டுமொத்தக் குடிகளையும் நம்பும்படி ஏவினான். " கர்த்தரைப் பற்றும் பயத்தோடிருப்பவர்களின்

நம்பிக்கை வீண்போகாது " (நீதி.23:17,18) என்னும் ஞானியின் வார்த்தைகள் யோசபாத் விசயத்தில் முழுமையாய் நிறைவேறியது. ஆம், யோசபாத்தையும், அவன் மனிதர்களையும் அழிக்கும்படியாகக் கூட்டுச்சேர்ந்து வந்தவர்கள், " **ஒருவருக்கு ஒருவர் விரோதமாக எழும்பி தங்களை அழித்துக் கொள்ளும்படியாக** " (வ.22) கர்த்தர் செய்தார். மிகுந்த பயத்தோடு எருசலேமை விட்டுப் புறப்பட்டவர்கள்(20.2), பெரும் மகிழ்ச்சியோடு எருசலேமுக்குத் திரும்பினார்கள். இவ்வசனத்தைக் கவனியுங்கள், " **பின்பு கர்த்தர் அவர்களை அவர்கள் சத்துருக்கள் பேரில் களிகூரச் செய்த படியால் யூதா மனுஷர் யாவரும், எருசலேமுக்குத் திரும்பினார்கள்** " ( நாளா 20.27). " உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் " (யோவான் 16.20) என்பதற்கு இதைவிடச் சிறந்த எடுத்துக்காட்டு என்ன வேண்டும்?

அன்பானவர்களே, தேவன் மீதான நம்பிக்கை என்பது முற்றிலும் வித்தியாசமானது. எல்லாம் நம் எதிர்பார்ப்பின்படியாகவும், சகலமும் நம் திட்டத்தின்படியாகவும் நடக்கும்போது அவரைக் கிட்டிச் சேர்வதும், அவரைத் துதிப்பதும், அவருக்கான காரியங்களில் ஈடுபடுவதும் சரியான நம்பிக்கை அல்ல. மாறாக, இனி அவ்வளவுதான், எல்லாம் முடிந்தது, இதற்கு மேல் ஒன்றும் முடியாது என்னும் ஒரு கைவிடபட்ட நிலையில் தேவனை நோக்கிக் கெஞ்சி, அவருக்காகக் காத்திருந்து காரியமாற்றுவதுதான் மெய்யான நம்பிக்கை. அப்படிப்பட்ட நம்பிக்கை வைப்பவர்களுக்குத் தான் அவர் எப்போதும் நல்லவராக இருக்கிறார். அப்படியானால் தேவன் மீதான நம்முடைய நம்பிக்கை எப்படியுள்ளது? எந்தளவில் உள்ளது? யாருடைய பிரச்சினையைக் கர்த்தர் தன்னுடையதாக எடுத்துக்கொள்கிறார் என்பதைக் கவனித்தீர்களா?.

இன்னும் நம்பிக்கை சம்பந்தமாக, யோசபாத் கூறுவதை நன்றாக கவனியுங்கள். " **கர்த்தரை நம்புங்கள்** ", "**அவருடைய தீர்க்கதரிகளை நம்புங்கள்** " என்றான். குறிப்பாக, கர்த்தர் யகாசியேலைக் கொண்டு சொன்ன வார்த்தைகளை நம்ப வேண்டுமென்று வலியுறுத்திக் கூறினான். கர்த்தருடைய வார்த்தைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்பட்டான். அது போலவே சிலுவைக்குப் பின்னால் வாழும் நமக்கு தேவன் புதிய ஏற்பாட்டின் மூலமாக கிறிஸ்துவின் உபதேசத்தைக் கொடுத்திருக்கிறார். ஆகவே, இப்பூமிக்குண்டான வாழ்விலும், மறுமைக்குண் டான வாழ்விலும் வெற்றிபெற கிறிஸ்துவின் உபதேசத்தை நாம் நம்ப வேண்டும். அதாவது, உபதேசத்தை ஏற்று நடக்க வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் நாம் அப்படிச் செய்ய வேண்டும்! அப்படிச் செய்ய நாம் தயாரா?

அருமையானவர்களே, யோசபாத் ராஜா மூலமாக தேவன் நமக்குத் தந்துள்ள பாடங்களைக் கற்றுக்கொண்டு, எல்லா ஆபத்துகளைத் தாண்டி வெற்றி வாழ்க்கை வாழத் தேவன் நமக்கு உதவி செய்வாராக! ஆமென்!!

# ஏன் இன்று ஒரே ஞானஸ்நானம் இருக்கிறது?

சகோ. J.C. சோட்

நீங்கள் அறிந்திருக்கிறீர்களோ, இல்லையோ எனக்குத்தெரியாது, ஆனால், கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம் என்று சொல்லிக்கொள்ளு கிறவர்கள் மத்தியில் பல ஞானஸ்நானங்கள் உண்டு என்று போதிக் கிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். முழுக்கு ஞானஸ்நானம், தெளிப்பு ஞானஸ்நானம், ஒருவருடைய தலையின்மேல் தண்ணீரை ஊற்றுகிற ஞானஸ்நானம், ஆவியின் ஞானஸ்நானம் என்று பல ஞானஸ்நானங்கள் இதில் உள்ளடக்கம். ஆனால், வேதாகமம் ஒரே ஒரு ஞானஸ்நானம் தான் உண்டு என்று போதிக்கிறது. எபேசியர் 4:4-6 ஒரே தேவன், ஒரே கர்த்தர் அல்லது கிறிஸ்து, ஒரே ஆவி அல்லது பரிசுத்த ஆவி, ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே சரீரம், ஒரே நம்பிக்கை நமக்கு உண்டு என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவைகள் ஒரே தேவன், ஒரே கிறிஸ்து என்று பொருள் தருமானால், ஞானஸ்நானம் என்பதும் ஒன்றே ஒன்று தான்.

அப்படியானால், ஒரே ஞானஸ்நானம் என்பது எந்த ஞானஸ்நானம்? மனிதர்கள் இன்று பேசுகிற ஞானஸ்நானம் அல்லாமல் வேத வாக்கியங் களில் நாம் பல்வேறுபட்ட ஞானஸ்நானங்களை வாசிக்கிறோம். (மாற்கு 11:29) -ல் தன்னை சோதிக்க முயற்சி செய்த மக்களைப் பார்த்து இயேசு இப்படிக் கேட்டார், " யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற் றோ, மனுஷரால் உண்டாயிற்றோ எனக்கு உத்தரவு சொல்லுங்கள் என்றார் " (மாற்கு 11:30). கிறிஸ்து, யோவானால் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார் (மத்தேயு 3:13-17). எல்லா நீதியையும் நிறைவேற்றக் கிறிஸ்து ஞானஸ் நானம் பெற்றிருந்தாலும், பொதுவாக ஜனங்கள் வரவிருந்த கர்த்தருடைய ராஜ்யமாகிய சபைக்கு ஆயத்தமாக ஞானஸ்நானம் பெற்றார்கள். ஆகவே, அது மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானம் என்றழைக்கப்பட்டது (லூக்கா 3:3). யோவானின் ஞானஸ்நானம் காலவரம்பில்லாமல் எப்பொழுதும் இருக்கவேண்டுமென்ற நோக்கில் திட்டமிடப்பட்டதல்ல. அதற்கான நோக்கம் நிறைவேறியவுடன் அது முடிந்து போய்விட்டது.

மத்தேயு 3:11,12 வசனங்களில், யோவான் ஸ்நானகன், இயேசு கொடுக்கப்போகிற இரண்டு ஞானஸ்நானங்கள் பற்றிப் பேசுகிறார்; " மனந் திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப் பின் வருகிறவரோ என்னிலும் வல்லவ ராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத் திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்க ளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக் கூடை அவர் கையில் இருக் கிறது; அவர் தமது களத்தை நன்றாக விளக்கி, தமது கோதுமையைக் களஞ் சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் " என்றான் . யோவான் சொல்லும்போது, கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று சொன்னார். பின்பு, கிறிஸ்து தமது அப்போஸ்தலர்களிடத்தில், தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக வாக்குத்தத்தம் செய்தார் (யோவான் 15:26; 16:7,13; அப்போஸ்தலர் 11 : 8; லூக்கா 24:49) -யும் வாசியுங்கள். அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் அப்போஸ் தலர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கி, கிறிஸ்து போதித்தவை களையெல்லாம் அவர்களுக்கு நினைவூட்டினார். அத்தோடு அப்போஸ் தலர்கள் அந்நிய பாஷைகளில் பேசவும், அற்புத அடையாளங்கள் செய்யவும் வல்லமை கொடுத்தார். கிறிஸ்து அக்கினியால் ஞானஸ்நானம் கொடுப்பார் என்பது, துன்மார்க்கர் அக்கினியிலே மூழ்கடிக்கப்படுவார்கள் என்று பொருள். கிறிஸ்து ஒருநாளில் இந்த உலகத்தை நியாயந்தீர்ப்பார். அப் பொழுது துன்மார்க்கர் நரகத்தில் தள்ளப்படுவார்கள் (II பேதுரு 2:4) அவர் கள் நித்திய ஆக்கினையை அடையும்படி போவார்கள் (மத்தேயு 25:46) என்று வேதவாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. மறுபடியும், நரகம் அக்கினிக்கடலாக விவரிக்கப்பட்டிருக்கிறது (II பேதுரு 3:7; யூதா 7; வெளி 20; 10,14; 21:8). அதன் பொருள், துன்மார்க்கர், தேவபக்தியற்றவர்கள், இழந்து போனவர்கள் அக்கினிக்கடலில் மூழ்கடிக்கப்படுவார்கள் அல்லது ஞானஸ்நானப்படுத்தப்படுவார்கள். நிச்சயமாகவே, யாரும் ஒரு சரியான மனநிலையோடு அக்கினி ஞானஸ்நானத்தைப் பெற விரும்பமாட்டார்கள்.

I கொரிந்தியர் 10:1-4 வசனங்களில் பவுல் இப்படி எழுதுகிறார் " இப்படி யிருக்க, சகோதரரே நீங்கள் எவைகளை அறிய வேண்டுமென்றிருக்கிற னென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந் தார்கள்; எல்லாரும் சமுத்திரத்தின் வழியாக நடந்து வந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்.

எல்லாரும் ஒரே ஞான போஜனத்தைப் புசித்தார்கள், எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள்; எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார் கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே ". அந்நாட்களில் இது ஞானஸ்நான மாகக் கருதப்படவேண்டிய அவசியமில்லாவிட்டாலும், பவுல் இஸ்ரவேல் ஜனங்கள் சமுத்திரத்தின் வழியாக இருபுறமும் தண்ணீரால் சூழப்பட்ட நிலையில் மேகத்துக்குக் கீழாயிருந்ததை எண்ணிப் பார்த்து பவுல் இதை ஞானஸ்நானம் என்று விவரிக்கிறார். வேறுவிதமாகச் சொன்னால், அவர்கள் மேகத்துக்குள்ளாகவும், கடலுக்குள்ளாகவும் மூழ்கடிக்கப்பட்டி ருந்தார்கள் அல்லது அடக்கம் பண்ணப்பட்டிருந்தார்கள்.

எபேசியர் 4:4-6 வசனங்களுக்கு நாம் திரும்பும் போது, அங்கே பவுல் ஒரே ஒரு ஞானஸ்நானம் என்று சொன்னதை நினைவில் கொள்ளுங்கள். இந்த வார்த்தைகளை அவர் சொன்ன போது, தோராயமாக கி.பி. 64 ஆம் வருடம். ஆனால், வேத வாக்கியங்களில் நாம் வாசிக்கின்ற ஞானஸ் நானங்களில் எந்த ஞானஸ்நானம் ஒரே ஞானஸ்நானம்? அதைக் கண்டு பிடிப்பதற்கு ஒரு நல்ல வழி உண்டு. அதாவது, எப்பொழுதெல்லாம் ஒரு ஞானஸ்நானம் விசுவாசியின் ஞானஸ்நானமாக அல்லது தண்ணீர் ஞானஸ்நானமாக இல்லையோ அப்பொழுதெல்லாம் அது வேறு என்ன ஞானஸ்நானம் என்று சொல்லப்பட்டிருக்கும்? இதையே வேறு விதமாகச் சொன்னால், வேத வாக்கியங்கள் அப்படிப்பட்டவைகளைப் பரிசுத்த ஆவி யின் ஞானஸ்நானம், அக்கினி ஞானஸ்நானம், யோவானின் ஞானஸ் நானம், பாடுகளின் ஞானஸ்நானம், மேகத்தின் ஞானஸ்நானம், சமுத்தி ரத்தின் ஞானஸ்நானம் எனப் பேசுகிறது. எனவே, எபேசியர் 4:4-6 வசனங் களில், ஒரே ஞானஸ்நானம் என நாம் வாசிக்கும் போது, இது விசுவாசி களின் ஞானஸ்நானத்தைத் தான் குறிக்கிறது என்று நாம் முடிவுக்கு வந்து விடலாம்.

நம்முடைய நாட்களில் வாழும் மக்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் நமக்கும் இருக்கிறது என்று பேசக் கேட்கிறோம், ஆனால், இந்த ஞானஸ்நானம் கிறிஸ்துவால் அப்போஸ்தலர் களுக்கு வாக்குத் தத்தம் செயப்பட்டது. அதை அவர்களுக்கு கொடுத்ததும் கிறிஸ்துவே. எனவே, இந்த ஞானஸ்நானம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக கொடுக்கப் பட்டது; இன்று யாரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறுவதில்லை.

தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பற்றிப் போதிக்கிற வேறு சிலர் இருக்கிறார் கள். அவர்கள் ஒரு விசுவாசி இரட்சிக்கப்பட்டு, தான் இரட்சிக்கப்பட்டதை காட்டுவதற்கு ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி அவர்கள் சொல்வது சரியானால், ஒருவர் கிறிஸ்துவுக்கு வெளியே, அவருடைய சபைக்கு வெளியே இரட்சிக்கப்படுகிறார் என்று பொருள்படும். ஆனால், வேத வசனம் ஒருவர் கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்க, அவருடைய சபைக்குள் பிரவேசிக்க ஞானஸ்நானம் பெற வேண்டும் என்றே சொல்கிறது (கலாத்தியர் 3:26,27, Iகொரிந்தியர் 12:13). இந்தக் காரியத்தில் இந்த மக்கள் தவறு செகிறார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். கர்த்தருக்குக் கீழ்ப்படியும் வரை ஒருவர் இரட்சிக்கப்பட முடியாது. அந்த இரட்சிப்பின் ஒரு பகுதி தான் முழுக்கு ஞானஸ்நானம்.

தெளிப்பு மற்றும் ஊற்றுதல் ஞானஸ்நானங்கள் தேவனுடைய வார்த்தையின் போதனையிலிருந்து ஒருவன் எவ்வளவு தூரம் விலகிச் செல்ல முடியும் என்பதற்கு அடையாளமாக உள்ளது. தலையில் தண் ணீரை ஊற்றுவது, தெளிப்பது போன்றவைகளை ஒரு போதும் ஞானஸ் நானம் என்று சொல்ல முடியாது. ஞானஸ்நானம் என்பது ஓர் அடக்கம், ஒரு மூழ்குதல். தெளித்தல் என்பது வெறுமனே தெளித்தல் தான். அது போல, ஊற்றுதல் என்பதும் வெறுமனே ஊற்றுதல் தான். அவைகள் ஞானஸ் நானம் ஆகாது. இப்படிப்பட்ட பழக்கங்கள் மனிதனுடைய கண்டுபிடிப்புகள்.

நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருந்தால், அல்லது ஞானஸ் நானம் பெற்றிருப்பதாக நினைத்தால், ஒருவேளை அது தெளிப்பு அல்லது ஊற்றுதல் ஞானஸ்நானமாக இருந்து, அது சரியான நோக்கத்திற்காக பெறப்படாமலிருந்தால், வேத வசனங்களின்படி நீங்கள் ஞானஸ்நானம் பெறவேண்டும். ஆனால், இது இரண் டாவது ஞானஸ்நானமாகி விடும் என்று நீங்கள் சொல்லலாம். அப்படியில்லை, ஒரே ஒரு ஞானஸ்நானம் தான், நீங்கள் கர்த்தருடைய உபதேசத்தின்படி ஞானஸ்நானம் பெறாதிருந்தால் நீங்கள் ஒருபோதும் ஞானஸ்நானம் பெறவில்லை. வேத வாக்கியங் களின்படி நீங்கள் ஞானஸ்நானம் பெற்றால் தான், வேதாகமத் தின்படியான ஒரே ஞானஸ்நானத்தைப் பெற்று விட்டதாக உங்களால் சொல்ல முடியும்.

பெண்கள் பகுதி

# " தேவனுடைய வார்த்தை "

சகோ. ரேச்சல் இராஜநாயகம்

அருமையான சகோதரிகளே! கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே உங்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிறிஸ்தவர்களாகிய நமக்குக் கிடைத்த மகா பெரிய சிலாக்கியம் தேவனுடைய வார்த்தை. அந்த வார்த்தைகள் மூலமாகத்தான் இன்றைக்கு உலகம் தேவனையும், அவருடைய ஒரே திருமைந்தன் இயேசுவையும் அறிந்து கொள்கிறது. ஒன்றான மெய் சபையை கட்டுவேன் என்று மத்.16:18 - ல் இயேசு வாக்குரைத்திருக்கிறார். மேலும், " ... மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்பட வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெல னால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார் லூக்கா ( 24:47-49 ). அவ்வண்ணமே எருசலேமில் காத்திருந்தார்கள். பரிசுத்த ஆவி அவர்கள்மேல் வந்தமர்ந்தபோது ( அப். 2:1-4 ) வாக்குத்தத்தம் நிறைவேறியது. அவர்கள் பிரசங்கிக்கத் தொடங்கினார்கள். தேவனுடைய முழுமையான மீட்பிற்கான திட்டம் மனுக்குலத்துக்கு பிரஸ்தாபப்படுத்தப்பட்டது. முதல் முறையாக சத்தியம் பிரசங்கிக்கப்பட்ட போது ( அப். 2:37,38 ) மூவாராயிரம் பேர் அழியாத தேவனுடைய இராஜ்ஜியமாகிய சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். ஆக, அருமையான சகோதரிகளே, தேவனுடைய வார்த்தையாகிய சத்தியம் நம் கையில் உள்ளது. இந்த சத்தியமாகிய வசனத்தை வைத்துக் கொண்டு நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? **சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்** என்று யோவான் 8:32- ல் சொல்லியிருக்கிறார். சத்தியம் ஒன்றுதான். அதில் எந்த மாற்றமும் இல்லை. உதாரணமாக, ஒருவருடைய பிறந்த வருடம், தேதி இவைகளை கேட்டால் திட்டமாக சொல்ல முடியும். அதில் எந்த ஒரு மாற்றமும் செய்யமுடியாது. அவைகள் மாறவும் மாறாது. இது உண்மை. அதே சமயம் ஒரு கொலையை செய்து விட்டார், அல்லது கொலை செய்ய முயற்சி செய்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் என்ன செய்தார் என்பது அவருக்கு மட்டும்தான் தெரியும்.

நீதிபதிகளோ, வக்கீல்களோ பல வாரங்களோ, மாதங்களோ, செலவழிப்பார்களே தவிர உண்மை இது தான் என்று கண்டுபிடிக்கமுடியாது. குற்றவாளியா? நிரபராதியா என்று தீர்ப்பது மிகவும் கடினமாய்ப் போய் விடுகிறது. ஆனால், நடந்த உண்மை அங்கேயே தான் இருக்கிறது, அது மாறாது, நிலையாக இருக்கிறது. உண்மையைத் தேடியும் அவர்களால் கண்டுபிடிக்க முடியாததற்குக் காரணம், உண்மை அவ்வப்போது மாறினதால் அல்ல, மாறாக, அவர்களுடைய குறைந்த அறிவுதான் அதற்குக் காரணம். ஆவிக்குரிய நிலையிலும் இதுதான் உண்மை. மூன்று காலங்களில் தேவன் செயல்பட்டிருந்தாலும் உண்மை என்பது சத்தியம் என்பது ஒன்றுதான். மனிதர்களாகிய நாம் குறைந்தவர்கள். மோசே காலத்தில் கொடுத்த பிரமாணங்களை இயேசு நிறைவேற்றி, புதிய பிரமாணத்தை நிலைநிறுத்தினர். அவ்வளவுதான். காலம் மாறினதே தவிர உண்மை ஒன்றுதான். அதாவது சத்தியம் ஒன்றுதான்.

எல்லாத் துறைகளிலுமே உண்மை என்று பார்க்கும்போது அது மிகவும் குறுகினதுதான். கணக்குப் பாடத்தில் பெருக்கல் வாய்ப்பாடு படிக்கும் போது இரண்டையும் பெருக்கினால் ஐந்து என்று ஒருவர் சொல்லலாம். ஆசிரியர் கட்டாயமாக அது தவறு என்று கூறி சரியான விடை ஏதாவது ஒன்றாகத்தான் இருக்கும் என்பார். ஏன்? உண்மை குறுகினது நிறைய பதில்கள் இருக்கலாம். ஆனால் சரியான பதில் ஒன்றுதான். மத உலகிலும் இது இன்றைக்கு மிகவும் காணப்படுகிறது. எதை விசுவாசித்தால் என்ன? அதில் என்ன பெரிய வேறுபாடு வந்துவிடப்போகிறது என்கிறார்கள்.

இயேசு கிறிஸ்து சொல்கிறார் வசனமே சத்தியம் ( யோவான் 17:17 ) என்று. ஆவிக்குரிய உண்மைகளைக் கண்டுபிடிக்கத் தேவனுடைய வார்த்தையைத் தவிர வேறு ஆதாரங்கள் எதுவுமில்லை. சத்தியம் எது என்று தொடர்ந்து தேடிக் கொண்டே இருக்கவேண்டும். சத்தியம் எங்கும் தொலைந்து போகவில்லை, நாம் தான் எப்படி நீதிபதிகளும், வக்கீல்களும் உண்மைக் காக பல ஆதாரங்களைத் தேடுகிறார்களோ, அதுபோல ஒவ்வொரு விஷயத்திலும் தேவ சித்தம் என்ன என்பதைத் தேட வேண்டும். " தேவனுடைய வார்த்தை தான் உண்மை ".

சகோதரிகளே! கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் நாம் இந்த தேவனுடைய வார்த்தையைப் போதிக்க வேண்டும். தனிப்பட்ட முறையிலே ஒரு சிறந்த ஆசிரியராக இருந்து போதித்ததற்கு சகோதரி பிரிஸ்கில்லாவை மிகச் சிறந்த உதாரணமாக கூறலாம். பிரதான கட்டளையானது அனைத்து கிறிஸ்தவர்களுடனும் சம்பந்தப்பட்டது. ஆகவே, உலகத்தை

சத்தியத்தால் நிரப்புவது நம்முடைய பொறுப்பு (மத்:28:18-20). ஏறத்தாழ அனைத்துக் கிறிஸ்தவர்களும் இதை அறிந்திருந்தாலும் மிகச் சிலரே இதற்குக் கீழ்ப்படிகிறார்கள். பிறருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் நமக்குள் நம்மை உந்திக் கொண்டேயிருக்க வேண்டும்.

உலகத்திலேயே மிகவும் வல்லமையான ஆயுதம் தேவனுடைய வார்த்தைதான். உலகை உண்டாக்கினதும், கொந்தளித்த கடலை அமர்த்தியதும், தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றியதும் வார்த்தைதான். ஆத்துமாவை இரட்சிப்பதும், சமுதாயத்தை மாற்றியமைப்பதும், மனுக்குலத்தை மீட்டெடுப்பதும், ஒருவரின் வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுப்பதும் தேவனின் வார்த்தைகள் தான். இயேசுவை கொலை செய்தவர்களின் மனது குத்தப்பட்டு வாழ்க்கையை அப்படியே தலைகீழாக மாற்றியது வல்லமையான தேவனுடைய வார்த்தைகள் தான்.

தேவனுடைய வார்த்தையைப் போதிப்பது உலகிலேயே வைத்து மிக முக்கியமான வேலை. தேவனுக்கு ஒரே ஒரு குமாரன் இருந்தார். தெய்வீக உண்மைகளைப் போதிக்கும் ஓர் ஆசானாக தன் குமாரன் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார்.

இந்த உலகமானது திக்குத் தெரியாமல் வாழ்கின்ற மக்களையும், வழிநடத்துவாரும், ஆலோசனை சொல்வாரும் இல்லாமல், குணப்படுத்த இயலாத நிலையில் நம்பிக்கையற்று வாழ்பவர்களையும் கொண்டுள்ளது. இதற்குத் தீர்வு தேவன்தான். ஆனால், நாம் நடுவில் இருந்து அவர்கள் இருதயத்துக்குள் வார்த்தைகளைக் கொண்டு செல்ல உதவ வேண்டும். ஏசாயா தீர்க்க தரிசி, " **கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங் கட்டுதலையும், சிறைபட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர் களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத் தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், சீயோனிலே துயரப் பட்டவர்களைச் சீர்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார். அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்** " ( ஏசாயா 61:1-3 ). நம் நாட்டிலே வேதாகமம் எண்ணிக்கையில்

நிறைய இருந்தாலும் அதைச் சொல்லுகிறவர்கள் இல்லாவிட்டால் அதைக் கேட்காமலேயே மடிந்து போகிறவர்கள் அநேகர். ஆத்துமா முக்கியம் என்பதை நாம் உணர வேண்டும். ஒரு மனிதனின் உடைமைகளில் மிக முக்கியமானது அவன் ஆத்துமாதான். இரண்டு பொருள்கள் இந்த உலகத்திலும், நித்தியத்திலும் அழியாது. அவை, தேவனுடைய வார்த்தையும், மனிதனுடைய ஆத்துமாவும் தான். ஆக, இன்றைக்கு மிகவும் அவசரமாகச் செய்யப்பட வேண்டிய வேலை மனிதனுடைய ஆத்துமாவை தேவனுடைய வார்த்தையோடு ஒன்றாக இணைப்பதுதான்.

அருமையானவர்களே! ஆத்தும ஆதாயம் என்பது மிக முக்கியம். அதற்குத் தியாகம் தேவைப்படுகிறது. சமயங்களில் கண்ணீரும் சிந்தவேண்டியுள்ளது. காலம் குறுகினதாய் இருக்கிறது. நியாயத்தீர்ப்பு நிச்சயம். " **அறுப்புக்காலம் சென்றது, கோடைக் காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை** " ( எரே 8:20 ) என்று சோகமாகக் கூறுவோமா? இல்லை, அருமையான சகோதரிகளே, தேவனுடைய வார்த்தைகளை அற்பமாய் எண்ணாமல் உற்சாகமாய் செயல்படுவோம்.

## வேத வாக்கியங்களின் வழிநடத்துதல்

❇ ஜீவனளித்து, தேவனுடைய பிள்ளையாக மாற்றுகிறது.

❇ பாவம் செய்யாதபடி நம்மைக் காக்கிறது.

❇ புத்துணர்வையும், நம்பிக்கையையும் தருகிறது.

❇ நன்றியுணர்வைத் தருகிறது.

❇ உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தருகிறது.

❇ தேவனுக்கு பயப்படும்போது ஞானத்தைத் தருகிறது.

❇ நம் வழிகளைச் சுத்தப்படுத்துகிறது.

வாலிபர் பகுதி

# அந்த நாள்...

Bro. பென்னி மார்ட்டின்

வாலிபர்களாகிய உங்கள் யாவருக்கும் வானவராம் இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தில் வாழ்த்துக்கள். இவ்வுலகில் ஒவ்வொருவரும் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு. அந்த வகையில் நம் தேவன் நம்மை இப்பூமியில் வைத்திருப்பதன் நோக்கம் நாம் அவரை மகிமைப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் ( ஏசாயா 43:7 ). இப்புவியில் நாம் செய்யும் ஒவ்வொரு கிரியைக்கும் நிச்சயமாகவே நியாயத்தீர்ப்பின் நாளிலே கணக்குக் கொடுக்க வேண்டும். நியாயத்தீர்ப்பின் நாள் தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்பவர்களுக்குப் பயங்கரமான நாளாக இருக்கும். தேவனுடைய நாளை எப்படி மகிழ்ச்சியின் நாளாக மாற்றுவது என்பது பற்றி சில காரியங்களை வேதவசன வெளிச்சத்தின் வெளிச்சத்தில் காண்போம்.

பிரியமானவர்களே, நாம் வேதாகமத்தில் பார்க்கும்போது இவ்வுலகில் நாம் செய்த செயல்களுக்காக நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு கணக்குக் கொடுக்க வேண்டும் என்கிற உண்மையைவிட தெளிவாக எந்த ஒரு உண்மையும் போதிக்கப்படவில்லை. II கொரிந்தியர் 5:10 ல் " ஏனெனில், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன் பாக வெளிப்படவேண்டும் " என்று வாசிக்கிறோம். ஆனால் இன்றைய நாட்களில் அநேகருடைய வாழ்க்கையைப் பார்த்தால் நியாயத்தீர்ப்பு என்று ஒன்று இல்லவேயில்லை; நாம் யாருக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை என்று பலர் முடிவுக்கு வந்துவிட்டது போல் தெரிகிறது. ( பிரசங்கி 11:9 ) ல் சாலொமோன் ஞானி சொல்லும்போது " வாலிபனே உன் இளமையிலே சந்தோஷப்படு உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவை எல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத் திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி " என்று சொல்கிறார்.

இவ்வுலகில் எத்தனையோ நிகழ்வுகள் நிகழ்ந்தாலும் நியாயத்தீர்ப்பு நாளைப் போல பயங்கரமான நாள் ஒன்றுமே இல்லை. அந்த நாளை

மனதில் கொண்டவர்களாய் நாம் இவ்வுலகில் வாழும் போது தீமையை விட்டு விலக கர்த்தருக்குப்பிரியமான காரியங்களைச் செய்வோம். அப்போது நாம் அந்த நாளைக்குறித்துப் பயப்படாமல், சந்தோஷமான அந்த நாளுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருப்போம்.

இவ்வுலகில் நாம் வாழும் நாட்களில் வேதவசனங்களின்படி நடக்கவில்லையென்றால் நியாயத்தீர்ப்பு நாளிலே நாம் தேவனுக்கு முன்பாக நின்று பதில் அளிக்க வேண்டும். இவ்வுலகில் நாம் வாழும் நாட்கள் நம் நித்தியத்தை நாமே தெரிந்தெடுப்பதற்காக தேனால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் நாம் நித்தியத்தை எங்கே கழிப்பதென்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும். நியாயத்தீர்ப்பு நாளிலே நமக்கு இரண்டாவது வாய்ப்பு கொடுக்கப்படமாட்டாது. இப்போது நாம் வேதவசனங்களின்படி நடக்கத் தவறினால் நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நின்று பதில் அளிக்க வேண்டுமேன்று வேதவசனங்களின் துணைகொண்டு பார்ப்போம்.

## I தேவனுடைய வசனங்களை அறியாதிருந்தால்....

ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ள தேவனுடைய வார்த்தைகளை நாம் கற்றுக்கொள்ளத் தவறினால் நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நம்முடைய பதில் என்னவாயிருக்கும்? வேதாகமம் தெய்வீக இரட்சிப்பின் திட்டத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது (எபேசியர் 3:1-3). தேவனுடைய சத்தியத்தை நாம் அறியாமல் மரித்தால் நித்திய நித்தியமாக இரட்சிக்கப்படமுடியாது.சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் " என்று இயேசு சொன்னார் (யோவான் 8:32). அந்தக் கடைசி மாபெரிய நாளில் தேவனுடைய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும் ( யோவான் 12:48 ). நம்முடைய நாட்களில் வேதவசனங்கள் பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி, இணையதளம் மூலம் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. எனவே நாங்கள் வேத வசனங்களை கேட்டதே இல்லை என்று யாருமே சாக்குப்போக்கு சொல்ல முடியாது. அப்படியே வேத வசனங்களைக் கேட்டிராவிட்டாலும் தேவனுடைய சிருஷ்டிப்புகளைப் பார்த்து இவைகளையெல்லாம் வடிவமைத்தவர் உருவாக்கியவர் ஒருவர் இருக்கிறார் என்று அவர்கள் முடிவுக்கு வரவேண்டும். அவர்களும் போக்குச் சொல்ல இடமில்லை.

## II கிறிஸ்துவுக்குள் இல்லாதிருந்தால்....

சத்தியத்திற்கு கீழ்ப்படிய வாய்ப்புக்கு மேல் வாய்ப்பு இருந்தும் அதைத்

தள்ளி கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும் போது நியாயந்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நம்முடைய பதில் என்னவாயிருக்கம்? (ரோமர் 2 : 89 ). (எபிரெயர் 2 : 1 – 3) கிறிஸ்துவுக்குள் இருப்பது மிக முக்கியமானது. ஒரு மனிதன பெரிய வீட்டுக்குள் இருப்பது அதிக ஆஸ்திகளுடன் இருப்பது, பெரிய அலுவலகத்தில் இருப்பதெல்லம் இரட்சிப்புக்கும், நித்திய ஜீவனுக்கம் உதவாது. ஆனால், ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருப்பது மிகவும் முக்கியமானது. ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் தான் கிறிஸ்துவும் அவனுக்குள் இருப்பார். அதுமாத்திரமல்ல, கிறிஸ்துவுக்குள் சகல ஆவிக்குறிய ஆசீர்வாதங்களும் உள்ளன (எபேசியர் 1: 3).

சரி, நாம் கிறிஸ்துவுக்குள் இருக்க என்ன செய்ய வேண்டும்? கிறிஸ்துவுக்குள் எப்படி இருப்பது பற்றி புதிய ஏற்பாட்டில் மிகவும் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது.ரோமர் 6 : 34 வசனங்களில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமாலிருக் கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மகித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற் குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்.

மேற்கூறப்பட்ட வசனத்தில் நாம் பார்த்தபடி ஒருவன் ஞானஸ் நானத்தினாலே தான் கிறிஸ்துவுக்குள் இருக்கமுடியும். புதிய ஏற்பாட்டில் ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருப்பதற்கும் இரட்சிப்படைவதற்கும் இதைத் தவிர வேறு வழி வெளிப்படுத்தப்படவில்லை. நாம் கிறிஸ்துவுக்குள் ளிருக்கும்போது கிறிஸ்துவை தரித்துக்கொள்ளுகிறோம். நாமெல்லாரும் கிறிஸ்துவின் குணாதிசயங்களைப் பெற்றிருந்தால் உலகத்தில் சண்டைகளோ, சச்சரவுகளோ இராது ; அப்போது இவ்வுலகம் ஒரு வித்தி யாசமான உலகமாயிருக்கும். II கொரிந்தியர் 5:17 ல் நாம் வாசிக்கும்போது “ ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின் என்று வாசிக்கிறோம். பிரியமான வாலிப உள்ளங்களே இதுவரை நாம் இந்த உலகப்பிரகாரமான காரியங்களில் மூழ்கியிருந்தாலும் பரவாயில்லை, இனிமேல் நாம் கிறிஸ்துவுக்குள் இருந்து ஒரு புதிய மனிதனாக வாழ்ந்து, அநேகரை நீதிக்குட்படுத்தி நட்சத்திரங்களைப் போல் பிரகாசிப்போம். தேவன்தாமே அதற்கு உதவி செய்வாராக! ஆமென்!

சிறுவர் பகுதி

# அனனியா & சப்பீராள்

Bro. ஏபில் நாயகம்

**தே**வனுடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. என்ன பிள்ளைகளே! அனைவரும் நலமாக இருக்கிறீர்களா? இந்த மாதமும் உங்களோடு இந்த இதழின் வழியாக வேத காரியங்களைப் பகிர்ந்து கொள்வது எனக்கு மகிழ்சிசி அளிக்கிறது. நீங்கள் கற்றுக்கொள்ளும் பாடங்கள் அனைத்தும் உங்களுக்குப் பயனுள்ளதாயிருக்கிறது என்று விசுவாசிக்கிறேன்.

இம்மாதம், ( அப் 5:1 - 6 ) அப்போஸ்தவருடைய நடபடிகள் 5:1-6 வசனப்பகுதியிலுள்ள புஸ்தகம் இந்த மாதம் நாம் நம் அதிகாரத்தில் உள்ள ஒரு சம்பவத்திலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்வோம். அனனியா என்ன மனிதனும், அவன் மனைவியாகிய சப்பீராளும் சபையின் வளர்ச்சிக்காக காணிக்கைகளைக் கொண்டு வந்தார்கள். அது நல்ல விஷயம் தானே ? ஆம், ஆனால் அவர்கள் ஒரு தவறை செய்துவிட்டார்கள். அது என்னவென்றால், அவர்கள் பேதுருவினிடத்தில் காணிக்கைகளை கொண்டுவந்த போது, அதில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்தார்கள். அதினாலே அவர்கள் பொய்சொன்னார்கள். அதின் விளைவாக தேவன் அவர்களை அடித்தார். அவர்கள் மரித்துப் போனார்கள்.

இந்த சம்பவத்திலிருந்து நமக்கு கிடைக்கும் பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

**1 . தேவனிடத்திலிருந்து ஒன்றையும் மறைக்க முடியாது**

மத் :10;26-ல் “வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை” என்று வசனம் சொல்கிறது. நாம் நினைக்கலாம், நான் யாருக்கும் தெரியாமல் செய்து விட்டேன் என்று. ஆனால், தேவன் பார்த்துகொண்டே இருக்கிறார் என்பதை மறந்து விடாதீர்கள். எனவே, தேவனுடைய பார்வைக்கு யாரும் தப்பமுடியாது.

ஆகவே, நாம் சிறு பிள்ளைகளாக இருந்தாலும் நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் உண்மையாகவும், கவனமாகவும் இருக்க வேண்டும். தேவன் அதில் பிரியப்படுவார்.

## 2) பொய், என்பது தேவனுடைய பார்வையில் கொடிய பாவம்.

தேவன் ஏன் இவர்களை அடித்துக் கொலை செய்யவேண்டும்? என்று நீங்கள் யோசிக்கலாம் . ஏனென்றால், தேவன் பொய்யை வெறுக்கிறார் . தேவன் நம்மேல் இப்பொழுது கிருபையாயிருக்கிறார். அதற்காக அதை பொருட்படுத்தாமல் நாம் பொய் பேசி பாவம் செய்யகூடாது.

எனவே, பிள்ளைகளே! நீங்கள் எதைச் செய்தாலும் தேவன் உங்களை கண்காணித்துக் கொண்டே இருக்கிறார். என்பதை உணர்ந்து செயல்படுங்கள். தேவன் வெறுக்கும் 7 காரியங்களில் " பொய் " யும் நன்று. ஆகவே, விளையாட்டுக்குக் கூடப் பொய் பேசாமல் தேவனுக்குப் பிரியமாக, தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். இந்தச் சிறு வயதிலிருந்து பயந்து வாழுங்கள்.

அப்பொழுது தேவன், உங்களை ஆசீர்வதித்து, நல்ல ஞானத்தைக் கொடுத்து, உங்களை ஒரு தானியேல் போல, யோசேப்பு போல உயர்த்தி மேன்மைப்படுத்துவார். சரியா?

**கர்த்தர் வெறுக்கும் 7 காரியங்கள் ( நீதி.6:16-19 ).**

1. மேட்டிமையான கண்
2. பொய் நாவு
3. குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்தும் கை
4. துராலோசனையைப் பிணைக்கும் இருதயம்
5. தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால்
6. அபத்தம் பேசும் பொய் சாட்சி
7. சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல்

மருத்துவக் குறிப்பு

# ஹைப்போ தைராய்ஸம்...

**உணவுமுறை :**

நாம் ஏற்கனவே பார்த்தது போல, இந்த நோய் " தைராக்ஸின் " ஹார்மோனின் அளவு உடம்பில் குறையும் போது ஏற்படுகிறது. உணவு முறையினால் இந்த ஹார்மோனின் அளவை உயர்த்தமுடியாது. அதை மருந்துகளின் மூலம் மட்டுமே உயர்த்த முடியும். ஆனால், சரியான உணவு முறையின் மூலம் ஹார்மேனின் அளவு குறையாமல், இந்த நோயினால் உடலில் ஏற்படும் பாதிப்புகளின் தன்மையைக் குறைக்க முடியும்.

**தைராக்ஸின் உற்பத்தியை பாதிக்கும் உணவுகள் :**

★ முட்டைகோஸ்
★ காலி பிளவர்
★ Brocolli

} இலை வகை சார்ந்த காய்கறிகள்

★ சோளம்
★ சோயா
★ சர்கரைவள்ளி கிழங்கு
★ கடுகு

இவைகளைத் தவிர்க்க வேண்டுவது அவசியமல்ல. ஆனால், கண்டிப் பாக கவனத்தில் கொள்ள வேண்டும். ஒருவேளை, இவைகளை உட் கொள்ள நேர்ந்தால். கூடவே ஐயோடின் உள்ள உப்பை ஒரு ஸ்பூன் சேர்த்து கொள்ளுங்கள்.

**தைராக்ஸின் உற்பத்திக்கு உதவும் ஐயோடின் :**

ஒரு நாளைக்கு அதிக பட்சம் 1100 மைக்ரோ கிராம் ஐயோடினை எடுத்துக் கொள்ளலாம். ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 3 டீஸ்பூன் ஐயோடைஸ்ட் உப்பு ( Iodised Salt ) எடுத்தால் போதுமானது. குறிப்பிட்ட ஐயோடின் அளவிற்கு மேல் உட்கொள்வதும் நல்லதல்ல.

Dr. Abel Nayagam
Vellore

# சபை

Bro. Maxie. Boren

தேவன் தம்முடைய வெளிப்பாட்டிலே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபையை அநேக வழிகளில் நம்ககு விளக்குகிறார். சபையின் இயல்பைப்புரிந்து கொள்ளவும். அதன் முக்கியத்துவத்தைக் கற்றுணரவும் அவர் அப்படிக் தெளிவாக்கியிருக்கிறார். இப்படி அநேக வித்தியாசமான விவரிப்புகளையே நாம் இங்கு " விளக்கங்கள் " என்று குறிப்பிடுகிறோம். ஆவிக்குரிய பெரிய சத்தியங்களை, ஜனங்கள் தங்கள்அன்றாட வாழ்வில் நன்கு அறிந்துள்ள காரியங்களைக்கொண்டு தேவன் எளிதாகப் புரியும்படி செய்கிறார். இக்கட்டுரையில் சபையைக் குறித்துக் கூறப்படுகிற தேவனால் வெளிப்படுத்தப்பட்ட பத்து விளக்கங்களை சுருக்கமாகக் காணப்போகிறோம்.

**1.சபை குடும்பத்திற்கு ஒப்பானது:**

தேவன் நம்முடைய பரலோகப்பிதா, அவர் சித்தங்கொண்டு சத்தியவசனத்தினால் நம்மை ஜெநிப்பித்திருக்கிறார் ( யாக்1:18 ) அப்போஸ்தலனாகிய பவுல், **தேவன் கிறிஸ்துவுக்குள் நமக்கு அளிக்கிற இரட்சிப்பின் மகத்துவத்தையும், நன்மையையும் உணர்ந்தவனாக.. இதினிமித்தம் நாம் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக் குடும்பத்துக்கும் நாமகாரணராகிய ... பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு வேண்டிக்கொள்கிறேன்** என்று எழுதினான். ( எபே.6.18 ) **நான் உங்களை ஏற்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன். நீங்கள் எனக்கு குமாரரும், குமாரத்திகளுமாயிருப் பீர்களென்று.... வாக்களித்திருக்கிறார்.** ( 2. கொரி. 6:18 ). அவருடைய பிள்ளைகளாகிய கிறிஸ்தவர்கள் உறுதியாக பிதாவின் சாயலைக் கொண்டிருப்பார்கள். சபையின் அங்கத்தினர்கள் கிறிஸ்துவுடன் ஐக்கியம் கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர்.( 1. கொரி.1:9 ). ( 1. யோவான்.1 :3,4 ). ஆகையால், தேவனுடைய குடும்பத்தில் சகோதர சகோதரிகளாயிருப்பது ஆவியில் பிறந்த மிக நெருக்க மான,அருமையான ஒரு உறவுமுறையாகும்.

**2. சபை கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஒப்பானது:**

ஒரு அழகிய வசனப்பகுதியில், கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தையும் பவுல் ஒப்பிட்டுப்பேசுகிறார். ஒரு மாம்ச சரீரத்தில் அநேக அவயவங்கள் இருந்தும், ஒரே சரீரமாயிருக்கிறது. சரீரத்தின் தொடர் இயக்கத்திற்கு (அவைகள்) அநேக அவயங்களும் ஒற்றுமையாக இயங்கு கின்றன. இப்படியாக தேவன் வடிவமைத்த நோக்கத்தை உணர்ந்து ஒற்று மையாக செயல்படவேண்டும். **நம்மில் இலட்சணமுள்ளவைகளுக்கு அலங்காிப்பு வேண்டியதில்லை, சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, இப்படி சரீரத்தை அமைத்திருக்கிறார்.... நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள் (1. கொரி.12:24,25,27 )** தேவன் , **கிறிஸ்துவை.... சரீரமான சபைக்கு அவரை எல்லா வற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்** ( எபே.1:22,23 ). ஒரே சரீரம் என்று சபையை பவுல் தெளிவாக்குகிறார் (எபே.4:4) தலையாகிய கிறிஸ்து சபையில் அனைத்து காரியங்களிலும் முதன்மைத்துவத்தை பெற வேண்டும் (கொலோ.1:18).

**3. சபை மணவாட்டிக்கு ஒப்பானது:**

( ஆவிக்குரிய ரீதியில் ) சபை கிறிஸ்துவுக்குக் மணமுடித்துக் கொடுக்கப்பட்டது. பவுல் கொரிந்து பட்டணத்து சபைக்கு எழுதும்போது **நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காகவே தேவ வைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்** என்று எழுதுகிறார். ( 2.கொரி.11.2 ) எபேசியருக்கு எழுதும்போது புருஷன் மனைவியின் உறவுமுறையை கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் ஒப்பிட்டுக் காட்டுகிறார்கள். புருஷர்களே, உங்கள் மனைவிகளின் அன்பு கூறுங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து.... தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். (எபே.5:25-27) ஆதலால் **சபை கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள ஒன்றாகும்** (எபே.5:27). ரோமர்,7:4 யும் வாசிக்கவும்.

**4.சபை இராஜ்ஜியத்திற்கு ஒப்பானது:**

சபை இயேசு கிறிஸ்துவுக்கு, தமது இராஜ்ஜியத்தில் இராஜவாயிருக்கிற அவருக்கே கீழ்ப்பட்டிருக்க வேண்டிய ஒன்று. கிறிஸ்துவின் இராஜ்யம் ஆவிக்குரிய இராஜ்யமாகும். **என்னுடைய இராஜ்யம் இந்த உலகத்திற்குரியதல்ல** என்று அவர் சொன்னார் .(யோவான்.18:36) அதாவது , அது, சவுல், தாவீது

மற்றும் சாலமோன் போன்ற இராஜாக்கள் ஆளுமை செய்த தற்காலிகமான இராஜ்யமல்ல என்பதுதான் இதன் பொருள். கிறிஸ்துவின் இராஜ்யம் பரலோக இராஜ்யமானதால், **நமது குடியிருப்பு பரலோகத்தில் உள்ளது** (பிலிப்பியர்.3:20). இருப்பினும் அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளபடி, யூதர்களின் பண்டிகை நாளான பெந்தெகொஸ்தே நாளிலே கி.பி 33-ல் ஸ்தாபிக்கிப்பட்ட இந்த ஆவிக்குரிய இராஜ்யம் பூமியில் செயல்படுகிறது. பவுல் கொலோசெயக் கிறிதவர்களுக்கு தெரிவிக்கும்போது, **இருளின் அந்தகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம் என்கிறார்.** (கொலோ.1:13) சுவிசேஷகனாகிய பிலிப்பு சமாரியவுக்குப் போய் அங்குள்ள ஜனங்களுக்கு **தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்தும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தைக் குறித்தும் பிரஙகித்தான்** (அப்.8:12).

## 5. சபை ஆட்டு மந்தைக்கு ஒப்பானது :

கிறிஸ்தவர்களை ஆடுகள் என்றும், இயேசு கிறிஸ்துவை மேய்ப்பனென்றும் வேதம் கூறுகிறது. இப்படியாக சபை மேய்ப்பனின் அன்பையும் பாரமரிப்பையும் எதிர்நோக்கியிருக்கிறது. சபை அவரது சத்தத்தைக் கேட்டு எச்சரிக்கையடைகிறது "...**ஆடுகள் அவனுடைய சத்தத்தை அறிந்திருக்கிறபடியால், அவனுக்குபின் செல்லுகிறது** " ( யோவான்.10:4 ). சபையில் மூப்பர்காளாகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர்களுக்கு அப்போஸ்தலனாகிய பேதுரு, **உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து... மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்புச் செய்யுங்கள் என்று அறிவுறுத்துகிறார். ( 1. பேதுரு.5:2,3 ). அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது, மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்** என்றார் ( 1. பேதுரு. 5:4).

## 6.சபை வீடாக ஒப்பிடப்படுகிறது :

சபை என்பது செங்கற்களைக் கொண்டோ, கல் மற்றும் மரங்களைக் கொண்டோ கட்டப்பட்ட கட்டிடமல்ல, அது ஆவிக்குரிய வீடு. அப்போஸ்தலனாகிய பேதுரு கிறிஸ்துவர்களுக்கு எழுதுகையில் **ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிகேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளை செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்** என்று கூறுகிறார். (1.பேதுரு. 2:5). பவுலும் எபேசுப் பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்கு எழுதிச் சொன்னதாவது: **அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல்**

கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப் பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. (எபே.2:20-21) கொரிந்து பட்டணத்து சபையாரிடத்தில் நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறார் என்றும் அறியாதிருக் கிறீர்களா? என்று கேள்வி கேட்கிறார் (1.கொரி.3:16).

### 7.சபை திராட்சைத் தோட்டத்திற்கு ஒப்பானது :

பாலஸ்தீனாவில் அநேக திராட்சைத் தோட்டங்கள் இருந்தன. அங்கேதான் நமது கர்த்தரும் வாழ்ந்து, தமது தனிப்பட்ட ஊழிய காலத்தில் போதித்துக்கொண்டிருந்தார். மத்தேயு, 20:1 - 16 வாசிக்கவும். பவுல் கிறிஸ்தவர்களுக்கு ஆகையால் எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிருபையிலே எப்பொழுதும் பெருகிறவர்களாயும் இருப்பீர்களாக என எழுதினார். (1. கொரி. 15:58). மத்தேயு 21:28 - 41 ல் திராட்சைத் தோட்டத்தை உருவகப்படுத்தி, இராஜ்யத்தின் இயல்பை இயேசு தெளிவாக்குகிறார்.

### 8.சபை முத்துக்கு ஒப்பிடப்படுகிறது :

மேலும் பரலோக ராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான் என்று இயேசு சொன்னார் (மத்.13:45 - 46). இந்த உவமையைக் கொடுத்ததன் மூலம் இராஜ்ஜியம் ஒப்புயர்வற்றது என்ற தலையாய போதனையைக் கொடுத்ததுடன், இந்த வார்த்தையின் அருதித் தன்மையையும் காட்டியுள்ளார். இதைப் புரிந்துகொள்வதன் மூலம், தேவன் கிறிஸ்துவுக்குள் கிருபையாக அருளிச்செய்யும் அனைத்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும், பாவமன்னிப்பும் இதன் உள்ளடக்கம் என்பதைப் புரிந்து கொள்கிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் ( எபே.1:3 ). எனவே, விலையுயர்ந்த முத்தை வாங்குதல் என்பது இதுதான்! பூமிக்குரிய எவ்வளவு சொத்தும்.... சொல்லப்போனால் முழு உலகமும் கூட.... ஒரு மனிதனின் ஆத்தும இரட்சிப்புக்கு ஈடானதல்ல! மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? என்று இயேசு கேட்டார். (மத்.16:26)

**9. சபை இராணுவத்திற்கு ஒப்பானது:**

நிச்சயமாகவே சபை தீமைகளோடு எதிர்த்துப்போராடுகிற யுத்தக்களத்தில் இருக்கிறது.ஆனால், இந்தயுத்தம், யுத்த விமானம், டாங்குகள், துப்பாக்கிகள், அணுகுண்டுகள் ஆகியவற்றை பயன்படுத்திப் போராடுகிற மாம்சக் காரியங்களுக்கான போராட்டம் அல்ல. பவுல், **நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல. எங்களுடைய போராயுதங்கள். மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல் அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது என்று கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார்.** ( 2.கொரி.10:3,4)

**10. சபை குத்துவிளக்குகளுக்கு ஒப்பானது :**

இன்றுள்ள துருக்கியின் மேற்கு எல்லையில் இருந்த ஏழு சபைகளுக்கு கர்த்தர் யோவான் மூலமாக எழுதிய நிருபமாகி வெளிப்படுத்தின விசேஷம் இரண்டு மூன்று அதிகாரங்களில் காண்கிறோம். இந்த நிருபங்களின் அறிமுகமாக அடையாளப்படுத்தும் பொருட்டு அந்த ஏழு பிராந்திய சபைகளையும் ஏழு பொன்குத்துவிளக்குகளாகப் பேசுகிறார்" ...ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்" (வெளி .1:20). இயேசு தமது சீடர்களிடத்தில் " நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்: மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது, விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல் விளக்குத் தண்டின்மேல் வைப் பார்கள். அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது " என்றார். (மத்.5:14:16).

## நாளும், நடப்பும்

1. வாக்காளர் பட்டியல் திருத்தம் அக். 24 வரை நீட்டிப்பு
2. உலக வங்கியின் மூலதனத்தை அதிகரிக்க வேண்டும் – இந்தியா
3. மீத்தேன் திட்டத்துக்கு அனுமதி கிடையாது
4. டாக்டர். அப்துல்கலாம் பிறந்த நாள் " இளைஞர் எழுச்சி தினமாக " அனுசரிக்கப்பட்டது.
5. வெளிப்படைத் தன்மையுடன் போட்டித் தேர்வுகள் – TNPSC புதிய தலைவர்
6. ஜமைக்கா எழுத்தாளர் மார்லன் ஜேம்ஸ் – க்கு புகழ் பெற்ற " புக்கர்விருது".
7. தெ. ஆப்பிரிக்காவுக்கு எதிரான 2– வது ஒரு தினப் போட்டியில் இந்தியா வெற்றி
8. சகிப்புத்தன்மை குறித்து பாகிஸ்தான் பாடம் நடத்த வேண்டாம் – இந்தியா

வசன ரீதியான கிறிஸ்துவின்சபை

# தாலந்துகளைப் பயன்படுத்துதல்

சகோ. K. பாஸ்கர்

அன்பான வாசகர்களே, ஆண்டவர் இயேசுவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள் பல. தேவன் நமக்குப் பல தாலந்துகளைக் கொடுத்திருக்கிறார். அதை வைத்து வசனரீதியான கிறிஸ்துவின் சபையை கட்ட முடியும். அதற்கு இம்மாத கட்டுரை பயன்படும்.

## I. <u>உவமை</u>

அன்றியும், பரலோகராஜ்யம் புறத்தேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, தன் ஆஸ்திகளை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத்ததுபோல் இருக்கிறது. அவனவனுடைய திறமைக்குத்தக்தாக, ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும்,ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்துமாகக் கொடுத்து, உடனே பிரயாணப்பட்டுப்போனான். ஐந்து தாலந்தை வாங்கினவன் போய், அவைகளைக்கொண்டு வியாபாரம்பண்ணி, வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தான். அப்படியே இரண்டு தாலந்தை வாங்கினவனும் வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தான். ஒரு தாலந்தை வாங்கினவனோ போய், நிலத்தைத் தோண்டி, தன் எஜமானுடைய பணத்தைப் புதைத்துவைத்தான். வெகுகாலமானபின்பு அந்த ஊழியக்காரருடைய எஜமான் திரும்பிவந்து, அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான். அப்பொழுது, ஐந்து தாலந்தை வாங்கினவன், வேறு ஐந்து தாலந்தைக் கொண்டுவந்து; ஆண்டவனே, ஐந்து தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே: அவைகளைக்கொண்டு, இதோ, வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான். அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான். இரண்டு தாலந்தை வாங்கினவனும் வந்து : ஆண்ட

வனே இரண்டு தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே ; அவைகளைக் கொண்டு, இதோ வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான். அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமும், உண்மை யுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான். ஒரு தாலத்தை வாங்கினவன் வந்து; ஆண்டவனே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன். ஆகையால், நான் பயந்து போய், உமது தாலத்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்; இதோ உம்முடையதை வாங்கிக் கொள்ளும் என்றான். அவனுடைய எஜமான் பிரதியுத்தரமாக: பொல்லாதவனும் சோம்பனுமான ஊழியக்காரனே, நான் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரென்றும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிவரென்றும் அறிந்திருந்தாயே. அப்படியானால் நீ என் பணத்தைக் காசுக்காரர் வசத்தில் போட்டுவைக்க வேண்டியதாயிருந்தது. அப்பொழுது, நான் வந்து என்னுடையதை வட்டியோடே வாங்கிக்கொள்வேனோ, என்று சொல்லி, அவனிடத்திலிருக்கிற தாலந்தை எடுத்து பத்துத் தாலந்துள்ளவனுக்குக் கொடுங்கள், உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான். இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும். பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றான்.

## II. தாலந்து என்றால் என்ன ?

தாலந்து என்றால் அன்றைய ரோம அரசாங்கத்தில் உபயோகப் படுத்தப்பட்ட பணம் என்பதாக இருந்தது. ஆனால் இன்றைய நாட்களில் தாலந்து என்பது திறமை அதாவது ஒரு காரியத்தைச்சாதிக்கப் போதுமான சக்தி, புத்தி, ஆற்றல் என்றும். அதற்கு நம் உடல், உழைப்பு, படிப்பு, பொரு ளாதாரம் செல்வாக்கு எல்லாம் செலவழித்து செய்யப் படுவதாகும். தேவன் நமக்குத் தேவையான பொக்கிஷத்தைத் தந்திருக்கிறார். அதாவது பொக்கிஷ மாகிய சுவிசேஷத்தைக் கொடுத்திருக்கிறார் ( I தீமோ 6:20; 2 கொரி 4:4-7) இந்த விலையேறப்பெற்ற சுவிசேஷத்தை வைத்து நமது நேரத்தைப் பார்க்காமல், காலத்தைப் பார்க்காமல், பணத்தைப் பார்க்காமல் நமது புத்தியைக் கொண்டு மக்கள் மத்தியில் கடின உழைப்பு மிகவும் அவசியம் என்று சொல்லலாம். இந்த உவமையில் வரும் ஐந்து தாலந்தைப்

பெற்றவன் உடனே போய் உழைத்தான், வருடக்கணக்காக உழைத்தான். அவனுடைய எஜமான் வெகுகாலமானபின்பு தான் வந்து கணக்குக்கேட்டார் (மத்.25:19 ). அதுபோலவே இரண்டு தாலந்தை வாங்கினவனும் காலத்தை, நேரத்தை வீணாக்காமல் கடினமாக உழைத்தான். அதற்குப் பலன் கிடைத்து. இன்றைய நாட்களில் கிறிஸ்துவின் சுவிசேஷம் என்ற பொக்கிஷத்தைப் பெற்றிருக்கிறோம். அதை வைத்து கடினமாக உழைக்க வேண்டும். ஏனென்றால் எஜமானாகிய கிறிஸ்து வந்து நம்மிடம் கொடுக்கப்பட்டுள்ள பொக்கிஷமாகிய சுவிசேஷத்தைக் குறித்துக் கணக்குக்கேட்பார் ( ரோமர் 14:12; 2கொரி.5:10 ). அப்பொழுது நாம் நம்மிடம் கொடுக்கப்பட்டுள்ள பொக்கிஷமாகிய சுவிசேஷத்தை மற்றவர்களுக்குப் போதித்து சத்தியத்தைச் சொல்லி யிருந்தால், அதன்மூலம் அவர்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவின் ராஜ்யாமகிய சபையிலே சேர்க்கப்பட்டிருந்தால் ( அப்.2:47 ) நல்லது, உத்தமமும் உண்மையுள்ள ஊழியக்காரனே, உன் எஜமா னுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்பார்.

### III. தாலந்துகளைப் புதைக்காமல் இருப்போமாக

ஒரு தாலந்துக்காரன் தன் எஜமானனைக் குறித்து வீண்புரளியைச் சொன்னான் ( மத்.25:24 ). அதுபோல் நம்மில் அநேகர் கிறிஸ்துவைக் குறித்தும், அவரது பிறப்பைக்குறித்தும் சொல்லப்படும் வீண்வார்த்தைகளைக் குறித்தும் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் (மத்.12:36). எனவே நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள நாட்களை, நேரத்தை, காலத்தை வீணாக்காமல் அதாவது மண்ணிலே போட்டுப் புதைக்காமல் இருப்போம். ஐந்து, இரண்டு தாலந்துகளைப் பெற்றவர்கள்போல ஒரு தாலத்தை வாங்கினவன் செயல் படவில்லை. ஏனென்றால் அவர்களைப் போல செயல்படவில்லையே என்று பயந்தான். அதுபோல மற்றவர்களின் ஊழியத்தைப் பார்த்துப் பயந்துபோகாமல் உற்சாகமாக நாம் செயல்பட வேண்டும். இங்கே ஒரு தாலந்து வாங்கினவனை அவளது எஜமான் சோம்பேறி என் றார் ( மத். 25:26 ). சோம்பேறியைக் குறித்து ஞானி சாலமோன் சோம்பேறியே நீ எறும்பினிடத்தில் போய் அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக் கொள் என்றும், சோம்பேறியே நீ எவ்வளவு நேரம் படுத்திருப்பாய் எப் பொழுது உன் தூக்கத்தை விட்டு எழுந்திருப்பாய் என்றும் கூறுகிறார் (நீதி 6 : 6,9) ஒரு தாலந்து பெற்றவனைப் போலவே இன்றும் அநேகர் சோம்பேறி களாக இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேதவசனம் கூறுகிறது. ஆதலால் தூங்குகிற நீ விழித்து மரித்தோரை விட்டு எழுந்திரு, அப் பொழுது கிறிஸ்து உன்னை பிரகாசிப்பாரென்று சொல்லியிருக்கிறார் (எபே 5:14).



# கோபம் என்கிற அமிலம்

Bro. Clarence Deloah

" ... நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள் ..." எபே 4:26.

கோபம் என்பது படுகிற இடத்தையெல்லாம் தின்று போடுகிற அல்லது அரித்துப்போடுகிற அமிலத்தைப் போன்றது. இது மனித சுபாவத்துக்குள் கட்டப்பட்டிருக்கிற பிரச்சனையாக இருக்கிறது. இது சாத்தானுடைய ஆயுதக்கிடங்கில் மிகவும் அபாயகரமான ஆயிதங்களுள் ஒன்றாக இருக்கிறது. கோபமானது கட்டுப்படுத்தப்படாத பட்சத்தில், அது ஜனங்களை உணர்வின் அடிப்படையிலும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் மிகவும் சேதப்படுத்திவிடும்.

ஆயினும், எல்லா போபமும் மோவமானதல்ல, நாம் கோபத்தை நல்ல வழியிலும் பயன்படுத்தலாம். ஒருமுறை .இயேசு ஒரு மனிதனை குணப்படுத்தியபோது, பரிசேயர்கள் அந்த அற்புதம் சம்பந்தமாக நடந்து கொண்ட விதத்தைப்பார்த்து . இயேசு கோபப்பட்டார் ( மாற்கு 3:5 ). அநேகமுறை நம்முடைய இரட்சகர் மற்றவர்கள் தவறாக நடத்தப்பட்டபோது, துன்புறுத்தப்பட்டபோது, உதாசினப்படுத்தப்பட்ட போது கோபமடைந்திருக்கிறார்.

சில காரியங்கள் நம்மை கோபப்படுத்த வேண்டும் அவைகளாவன: பாலியல் மோசடி குழந்தைகள் தவறாகப் பயன் படுத்துதல், சட்டவிரோதமான போதைப் பொருள்கள் வியாபாரம், ஏழைகளை ஒடுக்குதல் போன்றவைகளாகும். நாம் கோபங் கொண்டாலும், பாவஞ் செய்யாதிருப்பதற்கான வழி பாவத்தின் மீது மாத்திரம் கோபப்படுவதாகும். அதாவது பாவிகளை நேசிக்க வேண்டும். ஆனால் பாவத்தை வெறுக்க வேண்டும். ஏனென்றால், சில வேளைகளில் கோபம் அன்பின் சிறந்த வெளிப்பாடாயிருக்கிறது.

ஆயினும், கட்டுப்படத்தப்படாத, தேவபக்தியற்ற கோபம் ஒன்று

இருக்கிறது. உங்கள் கோபம் பாவமான கோபமா என்பதை நீங்கள் எப்படி தீர்மானிப்பீர்கள்? நீங்கள் கோபப்படுவதற்கு போதுமான காரணம் இருக்கிறதா என்பதை விவரமாக ஆராய்ந்து தீர்மானம் எடுங்கள்.

இயேசு காரணமின்றி தன் சகோதரனிடத்தில் கோபப்படும் ஒருவர் பற்றி பேசியிருக்கிறார். நீதியுள்ள காரணத்திற்காக அல்லாமல் வேறு காரணங்களுக்காக கோபப்பட்டால் அது பாவமாகும். குற்றத்தின் மீது கோபப்படாமல் அந்த நபர் மீது கோபப்படுவது பாவமாகும். உங்கள் கோபம் பழி வாங்கத் தூண்டினால் அது பாவமாகும். நாம் கோபத்தை அப்படியே மனதில் வைத்து பிறரை மன்னிக்காமல் இருந்தால் அது அநீதியாகும்.

சாலொமோன் ஞானி இப்படியாகச் சொன்னார் " உன் மனதில் சீக்கிரமாய்க் கோபங் கொள்ளாதே; மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும் " (பிரசங்கி 7 : 9). மேலும் அவர் சொல்லும் போது " தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிழந்த பாழான பட்டணம் போலிருக் கிறான் " என்று சொல்கிறார் (நீதி மொழிகள் 25 : 28).

அநேக மக்களிடத்தில் உக்கிரகோபம் காணப்படுகிறது. அடிக்கடி சின்ன சின்ன விஷயங்கள் கூட பெரிதாக வெடித்துவிடுகிறது. நாம் கோபப்படும் போது சாத்தான் நம்மீது தாக்கு தலை நடத்த வாசலைத் திறந்து கொடுக்கிறோம். நீங்கள் கோபங் கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள் என்று பவுல் சொன்ன உடனே, " பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள் " என்று சேர்த்து கூறியிருக்கிறார் (எபெசியர் 4 : 26, 27). நாம் கோபத்தில் இருக்கும் போது பிசாசுக்கு எளிதாக இரையாகி விடுகிறோம்.

எப்படி அமிலம் தான் வைக்கப்பட்ட பாத்திரத்தை அழித்துப்போடுகிறதோ அதைப்போல கோபமும் தன்னால் வைக்கப்பட்ட மனதை அழித்துப் போடுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் பலவீனமானவர்கள், இந்த பிரச்சனையை மேற் கொள்ள இயேசுவை சாந்திருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

## சிறியதும், பெரியதும்

ஜாதிகளே, எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள்; ஜனங்களே எல்லாரும் அவரைப் போற்றுங்கள். அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது; கர்த்தரின் உண்மை என்றென்றைக்குமுள்ளது. அல்லேலூயா (சங்கீதம் 117)



ஏற்காடு கூட்டத்தில் சகோதரிகள்



சகோதரிகள் வகுப்பின் போது...




காலை தியான வகுப்பின் போது சகோ. சர்லோ பேசுகிறார்




ஏற்காடு கூட்டத்தில் ஊழியர்கள் மற்றும் சகோதரிகள்

Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2015-2017
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2015-2017**


# எங்களது இதர வெளியீடுகள்







சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

**தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்**








## திருமறை தியானம்

### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |







## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்


- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.






இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.